DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 227/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge , Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆண்டிசாமி | Caste | : |
| Father Name | : ஆண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **08.07.2025.**

**PW - 1**

**(**எதிரி ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம் மருங்காபுரி அருகில் உள்ள பீரங்கிமேடு என்ற ஊரில் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊர் பிடாரிபட்டி. நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது மகன் பெயர் பழனிசாமி. இந்த வழக்கில் இறந்துபோனது எனது மகன் பழனிசாமிதான். அவர் டேங்கர் லாரியில் ஓட்டுனர் வேலை செய்து வந்தார். எனது மனைவியின் பெயர் அடைக்கம்மாள். என் மனைவியின் அக்கா பெயர் நாச்சம்மாள். நாச்சம்மாளின் வீடு அம்புலிபட்டியில் உள்ளது. என் மகன் லாரியில் ஓடிவிட்டு எனது வீட்டிற்கு எப்போதாவது வருவார். அடிக்கடி நாச்சம்மாள் வீடு உள்ள ஊருக்கும் போவார். என் மகனும், எதிரியும் முன்பு ஒன்றாக சேர்ந்து சுற்றினார்கள். அவர்களுக்கு ஏதோ பிரச்சனை என்று தெரிந்தது. எதிரியின் குடும்பத்தில் ஏதும் பிரச்சனை இருந்ததா என்று எனக்கு தெரியாது. கடந்த 16.03.2020 அன்று மாலை 05.00 மணியளவில் வேலை முடிந்து நானும், எனது மனைவியும் வந்தோம். பீரங்கி

மேட்டில் எங்கள் பழைய வீட்டருகே எதிரி ஜெயராஜும், என் மகன் பழனிசாமியும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர். பாலமுருகனும் அவர்களுடன் உடனிருந்தார். எதிரி அப்போது கருப்புநிற பைக்கில் வந்திருந்தார். எதிரியும் என் மகனும் சண்டை போட்டதால் நான் ஏதோ சும்மா சண்டைபோடுகிறார்கள் என நினைத்துக் கொண்டிருந்தோம். அப்போது எதிரி அவரது பைக்கில் ஒரு அருவாளை வைத்துள்ளார், அதை எடுத்து வந்து என் மகனை தலையின் பின்புறம் வெட்டிவிட்டார். என் மகனை மீண்டும் வெட்ட வந்தபோது கையை நீட்டினார்., அதில் இடது கையில் வெட்டுப்பட்டு வாட்ச்சுடன் அந்த வெட்டு சரித்துக் கொண்டு போனது. எதிரி பையை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார். நாங்கள் போய் என் மகனைதான் பார்த்தோம். என் மகனை சிகிச்சைக்காக துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்துமேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு இரவு 09.00 மணியளவில் என் மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். திருச்சி அரசு மருத்துமனையிலிருந்தபோது துவரங்குறிச்சி போலிசார் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அதுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அதசாஆ.1** ஆகும். அந்த அருவாளை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் அருவாள்தான் அன்று எதிரி என் மகனை தாக்கியதாகும். அந்த அருவாள் **அதசாபொ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னால் அந்த பைக்கை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். எதிரி மேற்படி பைக்கை குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ளார். அந்த பைக்கை இன்று நீதிமன்றத்திற்கு எடுத்துவரவில்லை என்று எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எனக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். எனது முதல் மனைவி பெயர் அடைக்கம்மாள். எனது இரண்டாவது மனைவி அழகம்மாள்

என்றால் சரிதான். நான் அடைக்கம்மாள், அழகம்மாள் எல்லோரும் ஒரே குடும்பமாகதான் இருக்கிறோம். பீரங்கி மேட்டிலிருந்து இக்கரைகோசிகுறிச்சி செல்லும் பாதையில் இடதுபுறமாக எனது வீடும், தோட்டமும் உள்ளதா என்றால் தோட்டம் உள்ளது. மேற்படி பாதையில் வலதுபுறம் எனது வீடு உள்ளது. வலதுபுறமாக இருப்பதாக சொல்லும் வீடு தற்போது இடிந்துவிட்டது. எனது அண்ணன் குடும்பம் திருப்பூரில் உள்ளது. எனது அண்ணன் மகன் ஊருக்கு வந்தால் அவர் வீட்டில் தங்குவார். சம்பவத்தன்று நான் யார் தோட்டத்துக்கு எங்கே வேலைக்கு சென்றேன் என்றால் பக்கத்து தோட்டத்திற்கு வேலைக்கு போனேன். நானும், எனது மனைவியும் பிடாரன் தோட்டத்திற்கு அன்று வேலைக்கு போனோம். பிடாரன் தோட்டமும் ரோட்டிற்கு கீழ்புறம் உள்ளது என்றால் சரிதான். கீழ்புறம் உள்ள தோட்டத்திற்குதான் அன்று வேலைக்கு போனோம். அன்றைய தினம் காலையிலேயே பிடாரன் தோட்டத்திற்கு வேலைக்கு போய்விட்டு 03.30 மணிவரை அங்கிருந்தோம். பிடாரன் அன்று அங்கிருந்தார். எங்கள் தோட்டத்திற்கும் , பிடாரன்தோட்டத்திற்குமிடையே ஒரு வரப்புதான் உள்ளது. ஆனால் எங்கள் தோட்டத்திற்கு வர பிடாரன் தோட்டத்திற்கு வர வலதுபுற ரோட்டிற்கு வந்து மீண்டும் எங்கள் தோட்டத்திற்கு வரவேண்டும். வலதுபுறம் உள்ள பழைய வீட்டிற்கு போகவேண்டிய அவசியமில்லை என்றால் ரோட்டிற்கு பக்கத்திலேயேதான் அந்த வீடு உள்ளது. ரோட்டிற்கும், அந்த பழைய வீட்டிற்கும் சுமார் 30 அடிதான் இருக்கும், என் மகன் பழனிசாமிக்கு சம்பவ சமயத்தில் 23 வயது இருக்கும். அந்த சமயத்தில் அவருக்கு திருமணமாகவில்லை. என் மகன் பழனிசாமி லாரி ஓட்டுனராக இருந்தசமயத்தில் பல ஊர்களில் உள்ள பல பெண்களிடம் தகாத முறையில் நடத்தல் மற்றும் வம்பு செய்துவந்தார் என்றால் சரியல்ல. என் மகன் பழனிசாமிக்கு அந்த சமயத்தில் ஊரில் பல எதிரிகள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எதிரிக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருந்தது என்றால் சரிதான். எதிரி எனது கொழுந்தியா மகன் என்றால் சரிதான்.

எதிரியின் ஊர் கம்பளியாம்பட்டி என்றால் சரிதான். அந்த ஊர் எங்கள் ஊரிலிருந்து ஒரு கிலோமீட்டர் வலது புறம் தள்ளியிருக்கிறதா என்றால் சுமார் 3 கிலோமீட்டர் தூரம் இருக்கும். திருமணத்திற்கு பிறகு எதிரி குடும்பத்துடன் பாண்டிச்சேரிக்கு போனாரா அல்லது கம்பளியாம்பட்டியில் இருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் மகன் பழனிசாமி சம்பவ சமயத்தில் கம்பளியாம்பட்டிக்கு சென்று எதிரி சொக்கலிங்கத்தின் தாயார் வீட்டில் இருந்தாரா என்றால் டேங்கர் லாரி ஓட்ட போயிருக்கலாம். ஆனால் அவ்வப்போது எதிரியின் தாயார் வீட்டிற்கு போய் வருவார். எதிரியின் மனைவி அந்த சமயத்தில் குழந்தைகளுடன் பாண்டிச்சேரியில் இருந்தார். என் மகன் லாரி ஓட்டும்போது பாண்டிச்சேரியில் போய் தங்குவாரா என்றால் பல ஊருக்கு வண்டி ஓட்டிபோவார், எங்குபோய் தங்குவார் என்று தெரியாது. சம்பவத்திற்கு முன்பாக எதிரிக்கும், என் மகனுக்கும் மேலும் சண்டை நடந்ததா என்று தெரியாது. சம்பத்தன்று நடந்த சண்டைதான் தெரியும். சம்பவத்தன்று எதிரியும், என் மகனும் என்ன பேசி சண்டைபோட்டார்கள் என்றால் ஏதேச்சையாக போட்ட சண்டைதான். அது என்ன சண்டை என்றால் எதிரி மனைவி சண்டை போட்டுக்கொண்டு போய்விட்டார். அவரை திரும்ப கூப்பிட எதிரி என் மகனை கூப்பிட்டார். எங்கே போனாலும் அவர்கள் இருவரும் சேர்ந்து போவதால் எதிரி என் மகனை கூட வா என்று கூப்பிட்டார். என் மகன் எதிரியுடன் போக மறுத்துவிட்டார். எதிரிக்கும் அவர் மனைவிக்கும் என்ன பிரச்சனை ஏற்பட்டு எதிரியின் மனைவி கோப்பித்துக்கொண்டு போனார் என்று எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் நானும், எனது மனைவியும் இருந்தோம். எதிரியும், என் மகனும் இருந்தார்கள். அவர்களுடன் பாலமுருகனும் இருந்தார். அந்த புளியமரம் மற்றும் வீட்டிற்கு அருகே குடித்துவிட்டு போட்ட பாட்டில்கள் இருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. எதிரியும், என் மகனும் சுமார் 15 அடி தூரத்தில் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நானும், என் மனைவியும் சென்று சண்டையை விலக்கிவிட்டோம். மகனை திரும்ப

கூட்டிவந்தோமா என்றால் இல்லை. அங்கேயேதான் மூன்று பேரும் இருந்தார்கள். எதிரி பைக்கிலிருந்து திடீரென அருவாளை எடுத்து வந்து என் மகனை வெட்டிவிட்டார். அந்த பைக்கின் பதிவு எண் தெரியாது. நான் பார்க்கவில்லை. நான் சொன்ன அருவாளில் மரப்பிடி போடவில்லை. அதசாபொ.1 அருவாளில் மரப்பிடி இல்லையா என்றால் எதிரி கையில் பிடித்திருந்ததால் எனக்கு சரியாக தெரியவில்லை. வெட்டுபட்டவுடன் நான், என் மனைவி, பாலமுருகன் ஆகியோர் என் மகனை தூக்கினோமா என்றால் பாலமுருகன் சற்று தள்ளிநின்றார். நானும், என் மனைவியும் போய் தூக்கினோம். நான் லுங்கி கட்டியிருந்தேன், அதில் என் மகனின் இரத்தம் படவில்லை. கீழே கிடந்த என் மகனை நிமிர்த்தி என் காலில் வைத்தேன். அப்போது என் மகனின் தலையிலிருந்து இரத்தம் வடிந்தது. அதன்பிறகு என் மகனை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். யார் ஆம்புலன்சிற்கு போன் செய்தார்கள் என்றால் நிறைய பேர் கூடியிருந்தார்கள். துவரங்குறிச்சியிலிருந்துதான் ஆம்புலன்ஸ் வந்தது. ஆம்புலன்சில் என் மகனை ஏற்றிக்கொண்டு நானும், எனது மனைவியும் எனது மகனுடன் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு போனோம். மாலை 05.30 மணியளவில் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு போனோம். அப்போது அங்கு மருத்துவர் பணியிலிருந்தார். மருத்துவர் என் மகனுக்கு எப்படி, எங்கே, யாரால் காயம் ஏற்பட்டது என்று கேட்டார். நான் மருத்துவரிடம் எதிரி சொக்கலிங்கத்தால்தான் இந்த காயம் ஏற்பட்டது என்று சொன்னேன். நான் துவரங்குறிச்சி காவல்நிலையம் அருகே ஆம்புலன்சை நிறுத்தி தகவல் சொல்லிவிட்டு தான் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கே வந்தோம். நாங்கள் மருத்துவமனையில் என் மகனை உள்ளே கொண்டு சென்றபோது போலிசார் அங்கு வந்தார்கள். நான் துவரங்குறிச்சி மருத்துவமனையில் மருத்துவரிடம் விபரம் சொன்னபோது போலிசார் அங்கு இருந்தார்கள். அந்த போலிசார் யார் என்றால் பெண் ஆய்வாளர் ஆவார். அவருடன் போலிசாரும் இருந்தார்கள்.

அங்கு என் மகனின் தலையில் கட்டுப்போட்டுவிட்டு திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். திருச்சிக்கு வரும்போது நான் மட்டும்தான் என் மகனுடன் வந்தேன். என் மனைவி வரவில்லை. திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி என் மகன் இறந்தார் என்றால் சரிதான். துவரங்குறிச்சி காவல்நிலையம் அருகே ஆம்புலன்சை நிறுத்தியபோது ஆய்வாளரிடம் சொக்கலிங்கம் என்ற நபர்தான் என் மகனை வெட்டியதாக வாய்மொழியாகதான் சொன்னேன். துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் போலிசார் எழுதாத தாளில் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள். என்னை ஆம்புலன்சிலேயே திருச்சிக்கு அனுப்பினார்கள். அந்த தாளில் போலிசார் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரியின் மனைவி பெயர் செல்லமணி. எதிரியின் மனைவிக்கும், என் மகனுக்கும் கள்ளத்தொடர்பு ஏற்பட்டதால் எதிரியும், என் மகனும் பேசிக்கொள்ளமாட்டார்கள் என்று புகாரில் நான் எழுதிக் கொடுக்கவில்லை. இரவு 09.00 மணிவாக்கில் என் மகன் இறந்தபிறகு அவரது உடலை சவக்கிடங்கில் வைத்தார்கள். நான் அதன்பிறகு இரவே துவரங்குறிச்சியில் என் வீட்டிற்கு போனேன். அடுத்தநாள் காலை மீண்டும் காவல்நிலையம் போனேன். அப்போது என்னுடன் என் உறவினர்கள் 4 அல்லது 5 பேர் வந்தார்கள். 16.03.2020 அன்று இரவு சொக்கலிங்கத்தை துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் பிடித்து வைத்திருந்தார்கள். பாலமுருகன் காவல்நிலையத்தில் இருந்தாரா என்றால் அவர் வீட்டிற்கு சென்றுவிட்டார். நான் அதற்கு பிறகு பாலமுருகனை பார்க்கவில்லை. காலையில் சொக்கலிங்கத்தை துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் பார்த்தபிறகு போலிசார் எதிரி சொக்கலிங்கத்தை நாங்கள் விசாரித்துக் கொண்டிருக்கிறோம் என்றும், ஊரில் எந்தவித தகராறும் செய்யக்கூடாது என்று போலிசார் சொல்லி எங்களை அனுப்பிவிட்டார்கள். அதன்பிறகு பிரேத பரிசோதனை காரணத்திற்காக திருச்சிக்கு என் உறவினர்களுடன் வந்தேன். என் அண்ணன் மகன் விஜயன் வீட்டிற்கு அருகில் என் மகனை வெட்டியபிறகு இரத்தம் கொட்டியிருந்தது.

அதில் மண்ணை தள்ளிவிட்டுதான் நான் மருத்துவமனைக்கு வந்தேன். என் மகன் டீ சர்ட்டும், கருப்பு அல்லது பச்சை என்று சொல்லமுடியாத ஒரு கைலியும் சம்பவ சமயத்தில் கட்டியிருந்தார். திருச்சி அரசு மருத்துமனையில் வைத்து போரிசார் விசாரித்தார்களா என்றால் கையெழுத்து மட்டும் கேட்டார்கள். எதிரிக்கும், என் மகனுக்கும் எதிரியின் மனைவியின் தொடர்பாக மனவருத்தம் இருந்தது என்றால் சரியல்ல. என் மகன் பல பெண்களிடம் தகாத முறையில் நடந்தார் என்றும், அதனால் வேறு யாரோ என் மகன் மீது விரோதம் கொண்டு அவருக்கு காயம் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும், என் மகனுக்கும் பேச்சுவார்த்தை இல்லாததால் எதிரி மீது பொய்யாக வழக்கு ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்தவித சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.